සියලු ම හිමිකම් ඇවිරිණි
முழுப் பதிப்புரிமையுடையது
All Rights Reserved

බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education - Western Province

පළමු වාර ඇගයීම
முதலாம் தவணை மதிப்பீடு - 2018
First Term Evaluation

| | | | |
|---|---|---|---|
| ශ්‍රේණිය / தரம் / Grade 09 | විෂයය / பாடம் / Subject சைவநெறி | පත්‍රය / வினாத்தாள் / Paper I,II | පැය / மணித்தியாலம் / Hours 2 |

## பகுதி 1

- **சரியான விடையின் கீழ் கோடிடுக.**

1. தோப்புக்கரணம் போட்டு நாம் வணங்கும் இறைவன்.
   i. சிவபொருமான் ii. அம்பாள் iii. விநாயகர் iv. முருகன்

2. சமய வாழ்விற்கு உறுதுணை யாவது
   i. விரதம் ii. பண்டிகை iii. களியாட்டம் iv. அன்னதானம்

3. அப்பர் சுவாமிகள் பிறந்த ஊர்.
   i. திருவாரூர் ii. திருமுனைப்பாடி iii. தில்லை iv. திருவாமூர்

4. தமக்கு ஒப்பாரும் மிக்காரும் அற்ற பரம்பொருள் யார்.
   i. மகாவிஷ்ணு ii. சிவபொருமான் iii. பிரம்மா iv. திருமால்

5. இறைவனின் பேரொளிப் பிழம்பின் அடியைத் தேடி சென்றவர்.
   i. சதாசிவன் ii. கணநாதர் iii. பிரம்மா iv. திருமால்

6. அனற்பிழம்பாகிய அருட்சோதி குளிர்ந்து மலையாக ஒடுங்கிய இடம்.
   i. சிதம்பரம் ii. திருவண்ணாமலை iii. திருகோணச்சரம் iv. காசி

7. நற்பண்பாக கருத முடியாதது.
   i. பொறுமை ii. அன்பு iii. அழுக்காறு iv. சத்தியம்

8. மனிதரில் பிளவினையும், பிரிவினையும் ஏற்படுத்துவது.
   i. சுயநலம் ii. புரிந்துணர்வு iii. அன்பு iv. பொதுநலம்

9. திருஞானசம்பந்தர் தனது உபநயனச் சடங்கின்போது பாடிய பதிகம்.
   i. திருநீற்றுபதிகம் ii. அச்சோபதிகம்
   iii. பஞ்சாட்சர பதிகம் iv.கோயிற்பதிகம்

10. நான்காவது திருமுறையைப் பாடியவர்.
   i. திருஞானசம்பந்தர் ii. திருநாவுக்கரசர்
   iii. சுந்தரமூர்த்திநாயனார் iv. மாணிக்கவாசகர்

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

11. திருஞானசம்பந்தருக்கு திருமணம் நடைபெற்ற தலம்.
    i. திருத்தோணிப்புரம்    ii. திருகோலிக்கா
    iii. திருவரந்துறை    iv. திருநல்லூர்ப்பெருமணம்

12. சுந்தரமூர்த்திநாயனாரின் பெற்றோர்.
    i. புகழனார் - மாதினியார்    ii. சடையனார் - இசைஞானியார்
    iii. சிவபாதவிருதயார் - பகவதியார்    iv. சம்புபாதசிரியர் - சிவஞானவதியார்

13. சைவ மக்களின் தொன்மையான வானியல் அறிவின் சான்றாக அமைவது.
    i. சித்த வைத்தியம்    ii. ஆயுள்வேதம்    iii. சோதிடம்    iv. இரணவைத்தியம்

14. பஞ்சாங்கத்தில் வாரம் என குறிக்கப்படுவது.
    i. ஏழு தினங்கள்    ii. ஒருமாதம்    iii. ஒரு வருடம்    iv. ஐந்து நாள்

15. சுக்கில பட்சம் என்பதனால் கருதப்படுவது.
    i. பௌர்ணமி    ii. அமாவாசை    iii. வளர்பிறை    iv. தேய்பிறை

16. இருப்பத்தேழு நட்சத்திரங்களின் இறுதி நட்சத்திரமாக அமைவது.
    i. ரோகிணி    ii. பரணி    iii. அஸ்வினி    iv. ரேவதி

17. இரவி சக்கரம் ஒன்றின் பாகையாக விளங்குவது.
    i. 14.34 பாகை    ii. 13.33 பாகை    iii. 37.43 பாகை    iv. 43.33 பாகை

18. திதியின் அரைபங்கை குறிக்கும் சொல்.
    i. கரணம்    ii. யோகம்    iii. அயனம்    iv. சயனம்

19. யோகங்களின் எண்ணிக்கையாக அமைவது.
    i. இருபது    ii. பதினெட்டு    iii. முப்பது    iv. இருப்தேழு

20. பூமியினதும் ஏனைய கோள்களினதும் இயக்கத்தையும் அடிப்படையாக கொண்டது.
    i. வேதியல்    ii. பஞ்சாங்கம்    iii. பௌர்ணமி    iv. சூரியகிரகணம்

21. ஐந்தாம் சமயகுரவர் என போற்றப்படுபவர்
    i. இராமகிருஷ்ணர்    ii. விபுலானந்த அடிகள்
    iii. ஆறுமுகநாவலர்    iv. சிவபாதசுந்தரனார்

22. சைவப்புலவர் கா. அருணாசலதேசிகரின் பிறப்பிடம்.
    i. கல்லடி    ii. காரைநகர்    iii. களுதாவளை    iv. புளியந்தீவு

23. இலங்கையின் தேசியத் தலைவர்களில் ஒருவராக மதிக்கப்படும் சமய பெரியார்.
    i. சேர். பொன். இராமநாதன்    ii. விபுலானந்த அடிகள்
    iii. விசுவதாதபிள்ளை    iv. ஞானதேசிகர்

24. மனித வாழ்வின் துறவிற்கு ஆயத்தமாகும் நிலையைக் குறிப்பது.
    i. பிரம்மச்சரியம்    ii. சந்நியாசம்    iii. வானப்பிரஸ்தம்    iv. கிருகஸ்தம்

Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

25. எம்மைவிட்டுப் பிரிந்த ஆன்மாக்கள் வாழும் திசை.
    i. வடக்கு ii. கிழக்கு iii. மேற்கு iv. தெற்கு

26. இறந்த தாயாருக்கு பிதிர்கடன் நிறைவேற்றும் நாளாக அமைவது.
    i. சித்ரா பௌர்ணமி ii. தைப்பூசம் iii. மகாளயம் iv. ஆடி அமாவாசை

27. இருக்குவேத மக்கள் வழிபட்ட தெய்வங்களாக விளங்குவோர்.
    i. பிரம்மா, உருத்திரன், சிவன் ii. சிவன், பிரம்மா, விஷ்ணு
    iii. இந்திரன், வருணன், அக்கினி iv. இந்திரன், சிவன், விஷ்ணு

28. யாகத்தில் சொரியப்படும் ஆகுதிகளை தேவர்களிடம் சமர்ப்பிப்பவர்.
    i. வருணன் ii. வாயுதேவன் iii. யமதேவன் iv. அக்கினிதேவன்

29. "யாவருக்குமாம் உண்ணும் போது ஒரு கைப்பிடி" என்பதை வலியுறுத்தியவர்.
    i. திருவள்ளுவர் ii. திருமூலர் iii. திலகவதியார் iv. திருநீலகண்டர்

30. சிவபெருமான் மன்மதனை எரிந்த தலம்
    i. திருக்குறுக்கை வீரட்டம் ii. திருவண்ணாமலை
    iii. சிதம்பரம் iv. திருவதிகை வீரட்டானம்

(1 X30 = 30 புள்ளிகள்)

## பகுதி – 11

**முதலாம், இரண்டாம் வினாக்கள் உட்பட எல்லாமாக ஆறு வினாக்களுக்கு விடை எழுதுக.**

**1. சுருக்கமாக விடை எழுதுக.**

I. இறைவனின் இயல்புகள் மூன்றினை எழுதுக?
II. மாலுக்கும், அயனுக்கும் அசரீரி இட்ட கட்டளை யாது?
III. பிரம்மாவுக்கும், தாழம்பூவுக்கும் கிடைத்த தண்டணை யாது?
IV. பஞ்சாகத்தின் அங்கங்கள் யாவை?
V. ஒன்பதாந் திருமுறையில் அடங்குவன யாவை?

**(14 புள்ளிகள்)**

2. **பின்வரும் தேவாரங்களில் இரண்டினை வரிக்கிரமமாக எழுதி, அவற்றின் பொழிப்புரைகளையும் எழுதுக.**

I. "துஞ்சலும் துஞ்சல்.........."
II. "காதலாகிச் கசிந்து.........."
III. "இல்லா விளக்கது..........."
IV. "காப்பதோர் வில்லும்......."

**(16 புள்ளிகள்)**



agaram.lk

3. **“சோதியனே துன்னிருளே தோன்றா பெருமையனே”.**

I. பிரம்மாவும், விஷ்ணுவும் தமக்குள் முரண்பட்டது ஏன்?

II. போட்டியில் இருவரும் தோற்றமைக்கான காரணம் யாது?.

III. செருக்கொழிந்த இருவரும் யாது செய்தனா்?

**(10 புள்ளிகள்)**

4. **“ஒழுக்கம் விழுப்பம் தரும்”.**

i. சமூக நல்லிணக்கம் என்றால் என்ன?.

ii. கூட்டுப்பொறுப்புடன் செயலாற்ற விரும்பும் ஒருவா் தமக்குள் வளா்த்துக்கொள்ள வேண்டிய பண்புகள் எவை?

iii. சகிப்புத்தன்மையால் நாம் அடையும் பயன்கள் யாவை?

**(10 புள்ளிகள்)**

5. **“பஞ்சாங்கம் என்பது வானியல் அடிப்படையிலான கால அட்டவணை ஆகும்.”**

I. திதி என்பதனால் கருதப்படுவது யாது?.

II. வாக்கிய பஞ்சாங்கம் எதன் அடிப்படையில் எழுதப்பட்டுள்ளது?

III. கிரகங்கள் பற்றி நாம் கொண்டுள்ள நம்பிக்கை யாது?.

**(10 புள்ளிகள்)**

6. **“சைவசமயப் பெரியவா்கள் பலா் வாழ்ந்த நாடு இலங்கை”**

I. சைவப்புலவா் கா.அருணாசல தேசிகரின் பெற்றோா் யாா்?

II. அவா் எழுதிய சைவசமய நூல்கள் நான்கினை தருக?

III. இவரது சொற்பொழிவுகளில் இடம்பெறும் முக்கிய விடயங்கள் இரண்டினை எழுதுக.

**(10 புள்ளிகள்)**

7. **“இல்லறமல்லது நல்லறமன்று”.**

I. இல்லறம் என்றால் என்ன?

II. திருவள்ளுவா் குறிப்பிடும் இல்லத்தாருக்குரிய கடமைகள் யாவை?.

III. சைவமரபில் விருந்தோம்பலின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுக.

**(10 புள்ளிகள்)**

8. **“என் கடன் பணி செய்து கிடப்பதே”.**

iv. சமணத்தை விட்டு சைவ சமயத்தைச் சாா்ந்த திருநாவுக்கரசருக்கு நோ்ந்த துன்பம் யாது?.

v. அத் துன்பத்திலிருந்து இறைவன் அவரை எவ்வாறு மீட்டாா்?

vi. கண்ணப்ப நாயனாா் இறைவனை எவ்வாறு வழிபட்டாா்?

**(10 புள்ளிகள்)**

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk